# பொதுக்காலம் 27ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

ஆண்டின் பொதுக்காலம் 27-ஆம் ஞாயிறின் திருவழிபாட்டிற்கு வந்திருக்கும் உங்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கின்றேன்.

மனித வாழ்வில் நம்பிக்கை என்பது இதய துடிப்பு போன்றது.

நம்பிக்கை மனிதனை வாழ வைக்கின்றது.

நாம் இறைவன் இயேசு மீது கொண்டுள்ள அளவற்ற நம்பிக்கையால்தான் கிறிஸ்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இன்றைய நமது சமுதாய, குடும்ப சூழலிலே ஒருவரையொருவர் சார்ந்து பரஸ்பர நம்பிக்கை கொண்டு வாழ்க்கையை நகர்த்துகிறோம். நண்பர்களிடையே உள்ள நட்பை அவர்களின் நம்பிக்கை எனும் அளவுகோலால் அளந்து விடலாம்.

விவிலியத்தில் பல இடங்களில் நமது ஆண்டவர் இயேசு மக்களின் நம்பிக்கையற்ற தன்மையை கடிந்து கொள்கிறார். நம்பிக்கையில் வளரும் போது பயனையோ வெகுமதிகளையோ பாராட்டுக்களையோ நாம் எதிர்பார்க்க தேவையில்லை. மற்றவர் மீது நாம் வைக்கும் எதிர்பார்ப்பு சில நேரங்களில் நம்மை ஏமாற்றம் அடைய வைக்கிறது. அது நம்மை எதிர்மறையான எண்ணங்களுக்கு கூட அடி பணிய வைத்து விடும். ஆனால் கடவுள் மீது நாம் கொண்டுள்ள பற்றுறுதி நம்மை வாழ வைக்கிறது.

நம் வாழ்வில் அனைத்தும் கடவுளின் திருவுளப்படி நன்மைக்கே நடக்கின்றன. நம் நற்செயல்கள் அனைத்திற்கும் அதனால் ஏற்படும் பயன்களுக்கும் கடவுள் ஒருவர் தான் போற்றுதற்குரியவர். எந்த சூழலிலும் நம்பிக்கை இழக்காமல் நேர்மையாளர்களாக வாழ நம்மை அழைக்கும் இறைவனின் குரல் கேட்போம், கடமையுணர்வோடு நம் பணிகளை நேர்த்தியாகச் செய்து முடிப்போம். அவரது அன்பிலே நாளும் வளர இத்திருப்பலியில் இணைந்து மன்றாடுவோம்.

### முதல் வாசக முன்னுரை: அபக்கூக்கு 1: 2-3, 2: 2-4

பாபிலோனியர் இஸ்ரயேல் மக்களை கொடுமை செய்வதையும் கொள்ளையடிப்பதையும் கண்டு மனம் வெதும்பி ஆண்டவரை நோக்கி, “பொல்லாதவர் நேர்மையாளர்களை விழுங்கும் போது நீர் ஏன் மௌனமாய் இருக்கிறீர்?” என்று வினவிய அபக்கூக்கிற்கு தாம் குறித்த காலத்தில் தண்டனைத் தீர்ப்பை

நிறைவேற்றுவதாகவும், அதுவரை நேர்மையுடையோர் கடவுள் மீது கொண்ட நம்பிக்கையினால் வாழ்வார் என்றும் ஆண்டவர் மறுமொழி கூறும் முதல் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை: 2 திமொத்தேயு 1: 6-8, 13-14

எபேசு நகருக்கு ஆயராக நியமிக்கப்பட்டு இருந்த திமொத்தேயுவை திடப்படுத்தும் விதமாக புனித பவுல் எழுதிய கடிதம் இரண்டாம் வாசகமாக தரப்பட்டுள்ளது. கடவுள் மீது கொள்ளும் நம்பிக்கை நம்முடைய சொந்த முயற்சிகளால் மட்டும் கிடைப்பது அல்ல, மாறாக அவரின் திருவுளமே. வல்லமையும் அன்பும் கட்டுப்பாடும் கொண்ட உள்ளத்தை வழங்கிய கிறிஸ்து இயேசுவிடம் நம்பிக்கை கொண்டு, நமக்குள் குடிகொள்ளும் தூய ஆவியால் ஒப்படைக்கப்பட்ட நல்ல போதனையைக் காத்து கொள்ள புனித பவுலடியார் வழங்கும் அறிவுரைகளை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. நம்பிக்கையின் நாயகனே எம் இறைவா!

நம்பிக்கையின் ஒளியில் இறைமக்களை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், அருள் பணியாளர்கள், துறவறத்தார் என அனைவரையும் ஆசீர்வதியும், அவர்கள் தூய ஆவியின் அருள் கொடைகளை நிரம்ப பெற்றவர்களாக ஆன்மீக பலமும் உடல் நலமும் கொண்டு இறைப்பணியாற்ற வரம் தர வேண்டுமன்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. என்றும் உமது நம்பிக்கையில் எம்மை வழிநடத்துகிறவரே எம் இறைவா!

எமது ஆட்சியாளர்கள், நாட்டுத்தலைவர்கள். மக்கட் பணியாளர்கள் தன்னலமின்றி மக்கள் பணியாற்றவும், ஏழை எளிய மக்கள் ஒதுக்கப்படாமல், சமதர்ம சமுதாயம் அமைக்கப் பாடுபடவும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. வாழ்வளிப்பவரே எம் இறைவா!

எங்கள் பணி வாழ்விலே பாராட்டையும் பயனையும் எதிர்பார்க்காமல், கடமையுணர்வுடன் பணியாற்றவும், ஏமாற்றத்திற்கும் மன அழுத்தத்திற்கும் இடமளிக்காமல் என் பணியை நான் நேர்மையாக செய்கிறேன் என்ற மனநிறைவோடு வாழும் வரம் தர வேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அரவணைக்கும் அன்பு தெய்வமே எம் இறைவா!

வன்முறையால், இனமொழி வேற்றுமைகளால் மக்கள் துன்புறும் நிலை மாறிடவும், ஒருவரையொருவர் புரிந்து கொண்டு, விட்டுக் கொடுத்து வாழவும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. நிறைவளிப்பவரே எம் இறைவா!

போதிய மழையின்றியும் பருவநிலை மாற்றத்தினாலும் விவசாயத்தை சரிவர செய்ய முடியாமல் தவிக்கும் மக்களை கண்ணோக்கியருளும், எமது தொழில் முயற்சிகள் வெற்றி பெறவும், வேலைவாய்ப்புகள் பெருகவும், மக்கள் முன்னேற்றப் பாதையில் சென்றிடவும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடு கின்றோம்

**நன்றி: திருமதி. ஜெயின் வேலாயுதம், புளியரை, செங்கோட்டை மறைப்பணித்தளம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com